செய்தி வெளியீடு எண். 42-2018 நாள்: 22.02.2018

# விழுப்புரம் மாவட்டம் கால்நடை பராமரிப்புத்துறை சார்பாக 6.73 இலட்சம் கால்நடைகளுக்கு 14வது சுற்று கால் மற்றும் வாய் நோய் தடுப்பூசிப்பணி 01.03.2018 முதல் 21.03.2018 வரை செயல்படுத்தப்பட உள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

******

விழுப்புரம் மாவட்டத்தில் 14வது சுற்று கால் மற்றும் வாய் நோய் தடுப்பூசிப்பணி 6,72,900 கால்நடைகளுக்கு 01.03.2018 முதல் 21.03.2018 முடிய மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

கால் மற்றும் வாய் நோய் பிளவுபட்ட குளம்புகள் உள்ள அனைத்து கால்நடைகளையும் தாக்கக் கூடியது. இந்நோய் தாக்குதலால் கறவை மாடுகளின் பால் வற்றுதல், உழவு மாடுகளின் வேலைத்திறன் குறைதல், கன்றுகளில் இறப்பு ஏற்படுதல், கறவை மாடுகளில் சினை பிடிக்கும் சதவீதம் குறைந்து பொருளாதார இழப்பு ஏற்படும் நிலை ஏற்படுதல் போன்ற பிரச்சனைகள் ஏற்படும். ஆகவே, இந்நோயை கால்நடைகளுக்கு ஏற்படாவண்ணம் தடுப்பதற்கு தடுப்பூசி பணி மேற்கொள்ள செயல்திட்டம் தீட்டி ஆண்டுக்கு இருமுறை வீதம் மார்ச் மற்றும் செப்டம்பர் மாதத்தில் தடுப்பூசி பணி மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டு இதுவரை 13 சுற்று முடித்து 01.03.2018 முதல் 21.03.2018 முடிய 14வது சுற்று தடுப்பூசி பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 22 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 1099 ஊராட்சிகள், 3 நகராட்சிகள், 15 பேரூராட்சிகளில் தடுப்பூசி பணி மேற்கொள்ளப்பட உள்ளது. இதனடிப்படையில் விழுப்புரம் கோட்டத்தில் உள்ள 5 ஊராட்சி ஒன்றியங்களில் 1,26,500 கால்நடைகளுக்கும், கள்ளக்குறிச்சி கோட்டத்தில் உள்ள 6 ஊராட்சி ஒன்றியங்களில் 1,67,600 கால்நடைகளுக்கும், திண்டிவனம் கோட்டத்தில் உள்ள 6 ஊராட்சிகளில் 2,13,000 கால்நடைகளுக்கும், திருக்கோவிலூர் கோட்டத்திலுள்ள 5 ஊராட்சி ஒன்றியங்களில் 1,65,800 கால்நடைகளுக்கும், 01.03.2018 முதல் 21.03.2018 முடிய கோமாரி நோய் தடுப்பூசி பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

இப்பணிகளை சிறப்பாக முடிக்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் கால்நடை பராமரிப்புத் துறையோடு வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, பால் வளத்துறை, மகளிர் திட்டம், புதுவாழ்வுத்திட்டம், தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் விழுப்புரம் ஆகிய சகோதரத்துறையுடனான ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்தி அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் சிறப்பு கிராமசபா கூட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டு தடுப்பூசி போடுவதின் அவசியத்தையம், எந்தந்த தேதியில் தடுப்பூசி போடப்படும் எனவும் கிராம மக்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பணி சிறப்பாக நடைபெற, அகில இந்தி வானொலியில் ஒலிபரப்புதல், துண்டு பிரசுரம் வழங்குதல், ஆட்டோ மூலம் விளம்பரம் செய்தல் போன்ற நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, ஒருங்கிணைந்து அந்தந்த ஊராட்சிகளில் விளம்பரப்படுத்தி கால்நடைகள் விடுபடாமல் தடுப்பூசி பணியினை மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆகவே விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள கால்நடை வளர்ப்போர் தங்கள் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசியினை அந்தந்த தேதியில் போட்டு, நோயிலிருந்து காப்பாற்றி, பொருளாதார இழப்பை தவிர்த்து பயனடைய வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.